# இந்துசாதனம்

விரோதி வருஷம (1889)
ஆவணி மாதம் 28-ந் உ ஆரம்பமானது.

செவ்வாய் வெள்ளி தோறும் வெளி வருவது

Registered as a News Paper in Cey
P M G No. H A 59/300 of 1939

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத் - கூச] யாழ்ப்பாணம்:- நந்தன வருஷ ஆவணிமீ கஅ உ செவ்வாய்க்கிழமை (2 Sept. 1952) [இல - நகக]


# என்றுமுள்ள முப்பொருள்

## சைவ சித்தாந்தத் தனிச்சிறப்பு

உலகிலுள்ள எல்லாப் பொருட்களையும் மூன்று பிரிவுகளுள் அடக்கிவிடலாம். அப் பிரிவுகள் பதி (கடவுள்), பசு (உயிர்கள்), பாசம் (உலகம், மலங்கள் முதலியன) என்பன. இவ்வாறு பிரிப்பதற்கு முப்பொருளுண்மை என்று பெயர். இம் மூன்றும் ஆதியும் அந்தமுமில்லாமல என்றும் உள்ளன என்பது சைவ சித்தாந்தத்தின் முக்கியமானதோர் உண்மையாகும்.

கடவுள்: எட்டு குணங்களை உடையவராயும், ஊர், குணம், உருவம், எதுவுமின்றி, விறகில் தீயைப் போலவும், எள்ளுக்குள் எண்ணெய் போலவும் இருக்கிறார்.

"அணுவுக் கணுவாய்,
அப்பாலுக் கப்பாலாய்
விறகில் தீயினன்
பாலில்படு நெய்போல்"

"ஊரிலான் குணங்குறியிலான்
செயலிலா னுரைக்கும்
பேரிலானொரு முன்னிலான்
பின்னிலான் பிறிதோர்
சாரிலான்வரல் போக்கிலான்
மேலிலான் றனக்கு
நேரிலானுயிர்க் கடவுளா
யென்னுளே நின்றான்"

என்று கடவுளின் குணங்களைப்பற்றிக் கூறப்பட்டுள்ளது.

சிவத்தின் இயல்பு: கடவுள் இலக்கணம் கூறும் சிவஞானசித்தியார் முதற் சூத்திரத்துள் கடைசிச் செய்யுள்,

"சிவன் உருஅருவும் அல்லன்
சித்தினோடு அசித்தும் அல்லன்
பவமுதல் தொழில்கள் ஒன்றும்
பண்ணிடு வானும் அல்லன்
தவமுதல் யோக போகம்
தரிப்பவன் அல்லன் தானே
இவைபெற இயைந்தும் ஒன்றும்
இயைந்திடா இயல்பினனே"

என்று சிவபெருமான் இயல்பினை எடுத்துரைக்கிறது.

உயிர் அல்லது ஆன்மா: (பசு) உயிர் கடவுளைப்போலவே ஆதியும் அந்தமுமில்லாத பொருள். இவ்வுயிரானது ஆணவம், மாயை, கன்மம் என்ற மும்மலங்களையும் இயல்பாக உடையது.

ஆன்மா சதசத்து: செம்பில் களிம்பு இருப்பதுபோல் இயல்பாகவே உயிரில் பாசம் இருக்கிறது உலகத்தைச் சார்ந்துள்ளபோது இப்பாசம் உயிரை நன்றாய்ப் பற்றிக்கொள்ளும். உலகத்தைச் சாராமல் கடவுளைச் சார்ந்துள்ளபோது பாசம் விலகும். இவ்விரு தன்மையாகவும் உயிரிருப்பதால் இதற்குச் சதசத்து என்று பெயர். அதாவது அசத்தாகிய உலகத்தோடு சேர்ந்தால் அசத்தாகவும், சத்தாகிய சிவத்தோடு சேர்ந்தால் சத்தாகவும் ஆன்மா விளங்குவதால் சத் + அசத்து = சதசத்து என்று ஆன்மாவிற்குப் பெயர் ஏற்பட்டது.

பாசம்: பாசம் என்பது உயிர்களைக் கட்டிக் கடவுளையும் பேரின்பத்தையும் அடையவொட்டாது குறுக்கே நிற்கும் தடைப்பொருள். இதை ஐந்து கூறுக்குவர்: ஆணவம், கன்மம், திரோதாயி, சுத்த மாயை, அசுத்த மாயை என்பன ஐந்து மலங்களென்றும், கடைசி மூன்றையும் மாயை என்ற ஒரு கூற்றில் அடக்கி மும்மலங்கள் என்றும் கூறுவது வழக்கம். இம் மும்மலங்களிலும், மூல காரணமாகவும், ஒழிப்பதற்கு மிகவும் கஷ்டமாகவும் இருப்பது ஆணவ மலமாகும். இதைத்தான் மூலமலம் என்றும் சொல்லுவர்.

### உயிர் பாசத்தை நீக்கும் வழிகள்

இதுவரையில் பதி பசு பாசங்களின் உண்மையையும், இலக்ஷணங்களையும் கண்டோம். இனி உயிர் பாசத்தை நீக்கிப் பதியையடைவதற்குரிய சாதனங்களையும், அவற்றால் வரும் பயனையும் கவனிப்பாம். மாயையின் சேஷ்டையால் உலக இன்பத்தைப் பெரிதாக எண்ணி ஆணவத்தின் சேஷ்டையால் 'நான் எனது என்ற பற்றுக்களை வளர்த்து, கர்மத்தின் சேஷ்டையால் ஆன்மா நல்வினை தீவினைகளைப் புரிவதால்தான் பாசம் ஆன்மாவைக் கட்டியிருக்கிறதென்று மேலே கண்டோம். எனவே பாசம் ஒழிய வேண்டுமானல் இந்த சேஷ்டைகளையெல்லாம் ஒழிக்க வேண்டும். அதாவது உலக இன்பத்தைப் பெரிதாக எண்ணக்கூடாது. நான் எனது என்ற பற்றுக்களை வளர்க்கக்கூடாது.

தொடர்ச்சி 4-ம் பக்கம்

## வடபகுதி ஐக்கிய சங்கம்

வடபகுதி ஐக்கியசங்க 1952-ம் ஆண்டுக் கூட்டம் 5-9-52 காலை ஒன்பதரை மணியளவில் றீகல் படமாளிகையில் ஆரம்பமாகும். சேர் ஒலிவர் குணதிலக அவர்கள் கூட்டத்தைத் தொடக்குவார்களென அறிய வருகிறது.

## தென்னாபிரிக்கசட்டம்

தென் ஆபிரிக்க வாக்காளர் இடாப்புகளில் Dr. மலான் செய்த நிறத்துவேஷ விபரீத வேறுபாடுகளை ஒரு உயர் நீதி மன்றத் தீர்ப்பு நிராகரித்தது. அத்தீர்ப்பும் அதுபோன்றபின்னரும் வரக்கூடிய தீர்ப்புகளும் வலியிழக்கச் செய்யும் பொருட்டு ஒரு பாராளுமன்ற உயர் நீதி மன்றத்தை உருவாக்கும் ஒரு சட்டத்தை மலான் உண்டாக்கினர். அச் சட்டத்தின்படி உருவான நீதிமன்றம் மேலே குறித்த உயர்நீதிமன்றத் தீர்ப்பை நிராகரித்தது.

இப்பொழுது குறித்த சட்டத்தையே முறைபற்றதெனத் தென்னாபிரிக்க உயர்தர நீதி மன்றம் ஏகமனதுடன் நிராகரிக்கின்றது

## இந்து சன்மார்க்க சங்க மண்டபம்

வத்தளை — உணுப்பிட்டி இந்து சன்மார்க்க சங்க மண்டபம் ஒன்று புதிதாய் அமைக்கப்பெற்று நிகழும் ஆவணிமீ 9உ ஞாயிற்றுக்கிழமை (24 8 52) சேர் கந்தையா வைத்தியநாதன் அவர்களால் திறந்து வைக்கப்பெற்றது.

அத்தருணம் சமய வாழ்க்கை என்னும் பொருள்பற்றி திரு. க. சேதுகாவலர் M A அவர்களும் "சன்மார்க்கம்" என்னும் பொருள் பற்றி திரு. இ. பலசிங்கம் அவர்களும் அறிவுரைகள் ஆற்றினர்.

## கண்டிக் கலாசாலைத் தமிழ் மாணவர்

பாடசாலைகளிற் கல்வி பயிற்றுதல் தேசிய மொழிகளிலே நடக்கவேண்டுமென்னும் ஒழுங்கின்படி கண்டி திருகிற்றி கலாசாலையிலே (Trinity College) தமிழ்ப் பிள்ளைகள் படிக்க முடியாதென அறிய வருகின்றது. சிங்களமே அப் பள்ளிக்கூட மொழியாயிருக்குமென்பதே காரணம். இவ் விஷயத்தில் தமிழ்ப் பெற்றாரும் வேறுசில அறிஞர்களும் வித்தியாதிகாரிக்கு எழுதத் தீர்மானித்திருக்கின்றனர்.

## பொய்யிருள் கடிந்த மெய்ச்சுடரே!

திருச்சிற்றம்பலம்.

அரைசனே யன்பர்க் கடியனே னுடைய
அப்பனே யாவியோ டாக்கை
புரைபுரை கனியப் புகுந்துநின் றுருக்கிப்
பொய்யிருள் கடிந்தமெய்ச் சுடரே
திரைபொரா மன்னும் அமுதத்தெண் கடலே
திருப்பெருந் துறையுறை சிவனே
உரையுணர் விறந்துநின் றுணர்வதோ ருணர்வே
யானுன்னை யுரைக்குமா றுணர்த்தே.

திருச்சிற்றம்பலம்.

— திருவாசகம், கோயிற்றிருப்பதிகம்.

## அரசியல்அலை

# வெடி மருந்து விபத்தை விலக்க முடியாதா?

## அரசாங்க நடைமுறை போதாது!

இருபது முப்பது ஆண்டுகளுக்கு முன் சாதுவாக நடமாடிய 'சீனு வெடியும்' இக் காலக் கோலத்துக்குத் தக்கவாறு இப்பொழுது இடிமுழக்கச் சத்தம்போடுவது மாத்திரமன்று உயிராபத்தையும் உண்டுபண்ணிக்கொண்டிருக்கிறதென்பது நாட்டில் ஆங்காங்கு நடைபெறும் வெடி விபத்துகளில் இருந்தறியக்கூடியதாக இருக்கிறது.

ஆலயங்களிலே திருவிழாக் காலங்களிலும் களியாட்ட விழாக்களிலும் வெடிமருந்து விபத்துக் கூடிக்கொண்டே வருகிறது.

சில நாட்களுக்கு முன் ஒரு வெடிமருந்துத் தொழிற்சாலையில் நடந்த விபத்தினுற் காயமடைந்து மரணமானோர் தொகை நாளுக்கு நாள கூடிக் கொண்டு வருகிறதாகப் புதினங்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை சுதந்திரமடைந்தமையால் இந் நாட்டவர்கள் வெடி மருந்துபயோகத்திற் பழகி யுத்த காலத்தில் வெடி குண்டுகளை உண்டுபண்ணக் கூடியவர்களாக வேண்டுமென்று அரசாங்கம் நினைக்கின்றது போலும். இல்லையேல் இப்படியாக வெடிமருந்து வியாபாரம் எல்லாராலும் [illegible] லும் நடைபெறுவதற்கு உத்தரவு கொடுப்பதன் காரணமென்ன? சாதாரணமாகச் சிறு பிள்ளைகள் விளையாட்டுக்காக உபயோகிக்கும் சீனு வெடியே பல சிறுருக்கு மாத்திரமன்று வயது வந்தவர்களுக்கும் அங்கவீன ஆபத்தை விளைவித்திருக்கின்றதென்றால் இவ்வெடிகளாக்கப்படும் மருந்து விபத்தை உண்டுபண்ணக்கூடிய கலவையென்றே சொல்ல வேண்டும். பொதுவாக அரசாங்கம் தீர்ப் பழக்கவழக்கங்களைத் தடை செய்யத் தயங்குவது சர்வ சாதாரணமாகிவிட்டது. குறைந்த விலையிற் சாராயம் உற்பத்திசெய்வதிலும், குதிரைப் பந்தயத்துக்காக வேண்டிய வசதிகள் செய்துவைப்பதிலும் கவனஞ்செலுத்தும் அரசாங்கத்திற்கு இந் நாட்டவர்கள் எக்கேடு கெட்டாலென்னவென்றும் போலிருக்கிறது போலும்.

## திருக்கேதீச்சரத்தில் ஆவணி மூலத் திருநாள்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை அங்கத்தவர்களுடன் பல சைவமக்கள் ஒன்றுகூடி, சென்ற வெள்ளிக்கிழமை மாலை 29-8-52 யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டு திருகேதீச்சரத்தை யடைந்து ஆவணிமூலத்திருநாளாகிய சனிக்கிழமை பாலாவியாற்றிலேஸ்நானம் செய்து பிற இடங்களிலிருந்து வந்த அடியார்களுடன் காலைப் பூசை தரிசித்து வழிபாடாற்றினர்.

பகல் 12 மணியளவில் Dr. C. குருசாமி அவர்களும் சிறுப்பர் திரு S. கனகசபை அவர்களும் சங்கற்பிக்க உருத்திர அபிடேகக்கிரியைகள ஆரம்பமாகி அடியார்உள்ளங்களைக் கொள்ளைகொள்ளும் சிறந்த பூசை நடைபெற்றது.

பூசையிறை வெய்திய தும் வித்துவான் க.இராமலிங்கமவர்கள் பாடியபஞ்சாக்கரப்பத்து, அம்பாள் கட்டளைக் கலித்துறை, நடேசர் இரட்சித்தற்பத்து என்பன் கண்ணிகள் அரங்கேற்றப்பெற்றன.

மாலை ஏழுமணியளவில் சாயங் காலப் பூசை ஆரம்பமாகியது. சுவாமி சந்நிதியில் முன்னரேயுள்ள சட்ட விளக்குகளுடன் அம்பாள் சந்நிதியில் வித்துவான் க. இராமலிங்கம் அவர்களின் உபயமாகக் கொடுக்கப்பெற்ற சட்டவிளக்குகளும் பேரொளி பரப்ப சுவாமியும் அம்பாளும் சந்தனபிடேகம் செய்யப்பெற்றுச் சிறந்த பூசை நடைபெற்றது. புற ஒளிபோலவே அகஒளி நிறைந்த அடியார் பேரானந்தமுற்று இன்றுபோலவே என்றும் சிறந்த பூசனைகள் பொலிந்து வளரத் திருக்கேதீச்சரப்பெருமான் திருவருள்புரிவாராகஎன்று வேண்டிக்கொண்டனர்.

அபிடேகங்களும் பூசைகளும் இவ்வாறு அடியார் சிந்தைகளைக் கவரும் தன்மையவாய்ச் சிறந்து விளங்குதற்கு திரு. சித. மு. ப. சிதம்பரநாதச் செட்டியாரவர்களே மூலகாரணராயிருந்தனர்.

## வியாவில் சைவபரிபாலன வித்தியாலயம்

ஆறுமுகநாவலர் பெருமானின் உயரிய நோக்கங்களை விருத்தி செய்யும்பொருட்டு 1890-ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பெற்ற இவ்வித்தியாலயத்தின் 60-ம் ஆண்டுப் பூர்த்திக் கொண்டாட்டம், நிகழும் நந்தன வருஷம் ஆவணி மாசம் 21, 22, 23உ (5 6, 7-9-52) வெள்ளி, சனி, ஞயிறு ஆகிய மூன்று தினங்களிலும பிற்பகல் 4 மணியளவில் ஷ வித்தியாலயத்தில் ஆரம்பமாகி நடைபெறும். அக் காலங்களில் சேர் வை. துரைசாமி ஸ்ரீமான் சு. சிவபாதசுந்தரம்பிழ்ளை ஸ்ரீமான் V. வீரசிங்கம் M. P. ஸ்ரீமான் K. கிருஷ்ணபிள்ளை ஆகிய பெரியோர் தலைமையில், சமயம், பாஷை, கைத்தொழில், சங்கீதம், ஓவியம், ஆதியாம் பொருள்கள்பற்றி பல அறிஞர்கள் அரிய உபந்நியாசங்கள் நிகழ்த்துவார்கள். கடைசித் தினத்தன்று கைத்தொழில அபிவிருத்தியின் பொருட்டு ஒரு கதம்பக்கச்சேரி நடாத்தி, கைத்தொழிற்கட்டிடத்திற்குரிய பணம் சேகரிக்கப்படும என்று அறியவருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர்வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்கதீயதெல்லாம் அரனாமமே
சூழ்கவையகமுந் துயர்தீர்கவே.

# இந்துசாதனம்

யாழ். நந்தன ஹூ ஆவணிமூ
கஅ உ செவ்வாய்க்கிழமை

## மனிதவர்க்கத்தின் விதி வனிதையரிடத்தே!

மங்கையர்க்கரசி, திலகவதியார், காரைக்காலம்மையார், சீதாதேவி, தமயந்தி, நளாயினி, சந்திரமதி சாவித்திரி, திரௌபதை என்றெண்ணும் பொழுது கவியின் கற்பனைச் சித்திரங்களையா நினைவுகூருகின்றோம்? இல்லை. உலகில் ஓங்கி அறம் வளர்த்த திருமாமணிகளையே சிந்தையில் வைக்கின்றோம். கற்பென்னும் திண்மை இயல்பாகவே உண்டாகப் பெற்று பெண்ணினத்திற்குத் தனிப்பெருஞ்சிறப்புத் தந்த மங்கைநல்லார் காலங்கள் சீலநன்னெறி சிறந்த நாட்களென்று நவிலவும் வேண்டுங்கொல். அன்று மனிதன் புனிதனுகவிருந்தான். நன்றுசெய்து நயம்பெற உழைத்தான். உலகில் அறிவொளி நிறைந்தது. என்னை? மாதரார் கற்பில் நின்றன காலமாரியே.

இன்று பெய்யென்றாற் பொய்க்கின்றதே மழை! இருள் மயமாய் நன்று தீது அறியவியலாததாய் ஞாலம் இருக்கின்றதே. மனிதவர்க்கம் மறநெறிபுகுந்து செய்வதறியாது திகைத்து நிற்கின்றதே. இந் நிலைமையைக் கண்டு அறிஞர்களே அலமருகின்றனர். தத்துவ ஞானபண்டிதராகும் சேர். இராதாகிருட்டினன் கல்வி அநுபவ அறிவின்முதிர்ச்சியுள்ளவர், மகாத்மாகாந்தி அடிகள் போன்று அரசியலைச் சமயவியலிற் சமன் செய்து நோக்குபவர், ஒரு சொற்பெருக்கிலே பெண்ணினத்தை அறைகூவியழைத்து மனித வர்க்கத்தைப் படுகுழியில் வீழாது தடுத்து வைக்க முன்வருமாறு பணிக்கின்றார். "தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற சொற்காத்துச் சோர்விலாள் பெண்" என்ற இலக்கணமுடைய நாரியர் ஆடவரினும் கூடிய சத்தி வாய்ந்தவரே.

"காண்டகைய தங்கணவ ரைக்
கடவுளார் போல
வேண்டலுறு கற்பினர் தம் மெய்
யுரையில நிற்கும்
ஈண்டையுள தெய்வதமும் மா
முகிலும் என்றால்
ஆண் தகைமை யோர்களும்
அவர்க்கு நிகரன்றே"

எனக் கந்தபுராணங்கூறுதல் காண்க.

சென்று தேய்ந் திறுகிவிடும்போலச் சீர்கெட்டு நிற்கும் மனித வர்க்கத்தைக் காப்பாற்றும் வனிதாமணிகள் இக் காலக் கோலத்திலே தடுமாறி அழகு இராணிகள் ஆகவும், பந்தாட்டத்தில் மூன்றாந் திறலுடையராகவும், இயந்திரம் இயக்கும் இயல்பில் இணையற்றவர்களாகவும் விளங்கி, மனைத்தக்க மாண்புடையராகாது தற்கொண்டார் வளத்தக்காரல்லாது, நிற்கும் பெண்களா?

மருணீக்கியார் புறச்சமயம் புகுந்துவிட்டாரே என இரக்கங்கொண்டு இறைவனை இரந்து அவரை அரன்பால் அன்புவைக்கச்செய்தார் திலகவதியார் என்று இக் காலத்தில் உலகாயத வாழ்க்கையில் ஆடவரோடு சரிவரஉரிமை நாடும் நாரியர்களா மனிதவர்க்கத்திற்கு வழிகாட்டிகளாகக் கூடியவர்கள்?

தென்றமிழ்ப் பாவை செய்தவக்கொழுந்துகளாக மங்கைநல்லார் சைவநெறி நின்று சைவவாழ்வு வாழ்ந்து தெய்வப்பணி செய்த பழந் தமிழ் நாட்டுப் பெண்கள் திலகங்களின் வாழ்க்கை வரலாற்றை இக்கால அரிவையர்கள் அறிந்து அவ்வழி நின்றொழுக என்று நினைக்கின்றார்களோ அன்றுதான் மனிதவர்க்கம் உய்ந்தீடேற நற்காலம் உதயமாகுமெனலாம். ஆடவன் ஐம்பொறிநுகர்ச்சியில் ஆழ்ந்து கேடடைந்துவிட்டான் என்று மாதராரும் அவ்விழிதொழிலில் அவர்களுடன் போட்டி போடுவதானாற் புகலிடம் வேறுமுண்டோ?

திருக்கோயில் திருவலகிட்டு மெழுக்கிட்டுச் சிவப்பணி செய்யும் வரிவளையார்கள், விரதமிருந்து புராணங்கேட்டு ஆலயந்தரிசிக்கும் அரிவையர்கள் முன்போலுண்டா? பெண்ணினத்துக்குப் பெருமை வேண்டும் சம உரிமை வேண்டும்! அரசியல் அரங்கம் வேண்டும், அமைச்சர் பதவி வேண்டும் என்று வாதாடும்போதெல்லாம், சீதை திரௌபதை நளாயினி கண்ணகி உதித்த இந்த இனமா அடிமை வாழ்வு வாழ்வதென்று வாதாடும் வனிதையர்கள்! சீதைபோலத் திரௌபதை போல நளாயினி போல வாழ்ந்துவந்தால் மண்உலகம் விண்உலகமாய்விடுமே!

ஆடவர்க்கு இனி அறமொழி பகர்வதிற் பயனில்லை என்றே அறிஞர்கள் கருதி மாதராரை மனைமாட்சி விளக்குகளாகத் துலக்கி மனித வர்க்கத்தைக் காப்பாற்றி வைக்கும்படி வேண்டுகின்றார்கள் இக்காலத்தில் சீதை திரௌபதைபோன்ற சீரிய செல்விகள் பெண்ணினம் விளக்கக்கூடும் என்று நாம் நினைக்கின்றோம். பெண்ணினத்தின் பேருதவியைப் பெரிதும் வேண்டி நின்றார் மகாத்மா காந்திப் பெரியார். சத்தியப் போராட்டத்திற் பல மங்கையர்கள் சிலமாககின் றுதவி புரிந்தனர். எனவே பெண்ணுலகம் மாயப் பிரபஞ்ச மாசாலக் கானலை நீரென்றெண்ணித் தடுமாறுது தூய நினைவும் தூய மொழியும் தூய செய்கையும் உடையர்களாக நின்று மருள் நெறியில் மயங்கி நிற்கும் ஆடவர்களை ஈடேற்றுவார்களாக!

# சிவஞான போதச் செம்பொருள்

## பதினொராஞ் சூத்திர விளக்கம்

திரு. V. p காந்திமதிநாதபிள்ளை அவர்கள்

காணுங் கண்ணுக்குக் காட்டும் உளம்போல்
கான உள்ளத்தைக் கண்டு காட்டலின்
அயரா அன்பின் அரன்கழல் செலுமே

சிவோகம் பாவனையினும் உயிருணர்வு முனைத்து நிற்பதால், அப்பாவனையாற் கிடைக்கும் சில விளக்கம் ஏகதேச விளக்கமென்றோம். இவ்வுயிருணர்வு நீங்குதற் பொருட்டு உயிர் அப்பாவனையாற் கிடைத்த சிவத்தோடேகமாய்ச் சிவபணியில் வழுவாது நிற்குமென்றுஞ் சொன்னோம். இவ்வாறு நிற்றலின் பலன் மலமாயா கன்மங்களின் நீக்கமாகிய பாசநீக்கமென்றுஞ்சொன்னோம். இப்பாச நீக்கமொன்றே சிவ விளக்கத்தைப் பூர்த்தி செய்வதற்குப் போதுமா அன்றிப் பாசம் நீங்கிய உயிராலும் மேலுஞ் செய்யக்கிடப்பதுண்டா என்பதையும் ஆராய்வாம். இப்பாசத்தைக் கண்ணோய்க்கு ஒப்பிடலாம். கண்ணோய் நீங்கியதும், அக்கண்ணுக்கு ஆதித்தன் விளங்குவதில்லை. அதன் ஒளியே விளங்கும். அவ்வொளியைக் கொண்டே கண் ஆதித்தனைக் காணும். அதுபோலப் பாசம் நீங்கினதும் உயிர்க்குச் சிவம் விளங்குவதில்லை. அச்சிவத்தினருளே விளங்கும். இவ்வருள் விளக்கத்தாலேயே உயிர்க்குச் சிவம் விளங்கும். இவ்வருள் யாது? அது விளங்குமாறென்னை என்பதே ஈண்டாராய வேண்டுவது. சிவம் உயிர்களபால் வைத்துள்ள கருணையே 'அருள்' எனப்படும். இக்கருணையாலேயே சிவம் உயிர்கள்பால் அத்துவிதமாய்க் கலந்து நின்று உபகரிப்பதை முன்னரே விளக்கினோம். இவ்வுயிர்கட்கு உலகப் பொருள்களை அறிதற்கண் முதல்வனது அத்துவித உபகாரம் வேண்டப்படுமாறு போலப் பாசம் நீங்கிய முத்த உயிர்கட்கும் சிவத்தை அறிதற்கண் அச்சிவத்தினது அத்துவித உபகாரம் வேண்டப்படும். இவ்வுபகாரத்தாலேயே உயிர்கள் எவ்வகைப் பொருள்களையும் அறிகின்றன. இதுவே சிவத்தின் அறிவிக்கும் உபகாரம். இனி யாண்டும் வியாபகமாயுள்ள சிவம் உயிர்கள்பால் மட்டும் அத்துவிதமாய்க் கலந்துள்ளதா அன்றிப் பாசப் பொருள்களின் பாலும் அவ்வாறு கலந்துளதா? அவ்வாறு கலத்தலினால் உயிர்க்குக் கிடைக்கும் உபகாரம் யாது என்பதையும் ஆராய்வாம்.

கண் ஒரு பொருளைக் காணுதற்கு ஆதித்தனொளி அல்லது விளக்கொளி அக்கண்ணில் மாத்திரமன்றி, அதனாற் காணப்படும் பொருள்களிலுங் கலத்தல் வேண்டும். இன்றேல் இருட்டறையிலுள்ள பொருளையும் ஒளிகலந்த கண் காணல் வேண்டும். அஃதின்றாதலாற், காணப்படும் பொருளிலும் ஒளிகலத்தல் வேண்டுமென்பது பெறப்படும். அப்படியே, கண் ஒருபொருளைக் காணுதற்கு அக்கண்ணில் உயிர் உணர்வு மாத்திரமன்றி அக்கண்ணாற் காணப்படும் பொருளின் ஒளியும் உடன் கலத்தல் வேண்டும். உயிருணர்வு அக்கண்ணிற் கலத்தலினால், அக்கண் காண்டற் சக்தியைப் பெறும். அவ்வுயிருணர்வு அக்கண்ணாற் காணப்படு பொருளொளியிற் கலத்தலினால் அப் பொருளைக் காணுவதாகும். உயிர் கண்ணிற் கலத்தல் அதன் காட்டலுபகாரம். அவ்வுயிர் அக்கண்ணாற் காணப்படு பொருளொளியிற் கலத்தல் அதன் காட்டலுபகாரம் அதுபோல் உயிர் ஒரு பொருளை அறிதற்கும் சிவம் அவ்வுயிரின் பால் மாத்திரமன்றி அவ்வுயிரால் அறியப்படு பொருளினும் கலத்தல் வேண்டும். உயிரின் பாற் சிவம் கலத்தலினால் உயிர் அறியுமென்றோம். அச்சிவம் உயிரால் அறியப்படு பொருளினும் கலத்தலினால் அப்பொருளை உயிர் அறியும். எனவே உயிரின்பால் கலத்தலாகிய சிவ உபகாரம் அறிவிக்கும் உபகாரம் எனப்படுவதுபோல உயிரால் அறியப்படு பொருளின்பாற் கலத்தலாகிய சிவ உபகாரம் அறியும் உபகாரம் எனப்படும். ஆனாற் சிவம் அசத்துப் பொருளை அறியாதென்றோமே எனின், கூறுதும். அதன் கருத்து, சிவத்துக்கு அசத்துப் பொருள்களில் யாதோர் அறிவும் நிகழ்வதில்லை யென்பதனாற்; அவற்றில் அநுபவ அறிவில்லையென்பதே என்றாற், சிவம் உயிர்க்குப் பொருள்களை அறிவித்தலோடு தானும் அறியுமென்பதாய் முடியும். இவ்விருவகை உபகாரங்களையும் சிவம் உயிர்க்குச் செய்யும். இக்கருத்தையே இச் சூத்திரம் 'காணுங் கண்ணுக்குக் காட்டும் உளம்போற், காண உள்ளத்தைக் கண்டு காட்டலின்' என்றுணர்த்தும். ஈண்டு உளமென்றது உயிரை. இவ்வாக்கியம் காணுங் கண்ணுக்குக் கண்டு காட்டும் உளம் போல்' உள்ளத்தைச் சிவம் கண்டு காட்டலின், என்றவையும். இதன் கருத்து, காணுகிற கண்ணுக்கு உயிர் காட்டித் தானுங் காணுவது போலச் சிவம் உயிர்க்கு அறிவித்துத் தானும் அறியும் என்பதாம்.

பாசம் நீங்கிய உயிர்
சிவத்தினிருவிதஉபகாரங்களையும்
அறிந்து மறவாது
அன்பு மீதூர்தல் வேண்டும்

சிவம் உயிர்கட்கு அறிவித்தும், அறிந்தும் உபகரித்து வருமெனறோம், இவ்வுபகா

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

# மனம் மொழி மெய் - அன்பு

இறைவனை இறைஞ்சுதல் எவ்வாறென்று சைவ நூல்கள் விளக்கமாகக் கூறுகின்றன. முழுமுதற்பால் அடியார்கள் அன்புவைத்தல் மூவகையாலுமெனத் தெய்வப்பாக்களாமல தேவார திருவாசகம் எடுத்துரைக்கின்றன. மனத்தால் நினைத்தலும் மொழியால் வாழ்த்துதலும் மெய்யால வழிபடுதலும உளவாமென்றால் உள்ளன்பு உதிக்கும் என்பர். பக்தி உற்பத்தியாதல் இவ்வழியே.

வாழ்த்த வாயும்
நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியுந்
தந்த தலைவனை
சூழ்த்த மாமலர்
தூவித் துதியாதே
வீழ்த்த வாவினை
யேன் நெடுங் காலமே

—: இறை ஒலி :—

என்று சொல்லரசர் அருள்மொழி கூறிப் போந்தார், 'உறவு கோல் நட்டு உணர்வு கயிற்றினால் முறுக வாங்கப் பாவிற் படு நெய்போல மறைய நின்றுளன் முன்நிற்பன்' என்றும் 'நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுளே, புக்கும் நிற்கும் பொன்னார் சடைப் புண்ணியன்' என்றும், 'நெஞ்சினைத் தூய்மை செய்து நினைக்குமா நினைப்பியாதே' என்றும் 'உள்ளம் உள்கி உகந்து சிவனென்று மெள்ளவுள்க வினைகெடும் மெய்ம்மையே' என்றும், 'இனிய நினையாதார்க்கின்னாதானை' என்றும், 'உருகி ஊன்குழைந்தேத்தியெழுமின்' என்றும், துண்ணென மனத்தால் தொழு நெஞ்சமே, பண்ணிலுலமுனம் பாடலத் செய்தே' என்றும் ஆங்காங்கே அமுதமொழி பொழிந்த அப்பர் சுவாமிகள்,

வந்து கேண்மின்
மயல்தீர் மனிதர்காள்
வெந்த நீற்றன்
விசயமங் கைப்பிரான்
சிந்தை யால்நினை
வார்களைச் சிக்கெனப்
பந்து வாக்கி உய்க்கொளும்
காண்மினே

என்று ஆணித்தரமாக செறி புகட்டுகின்றார்.

மனம் மொழி மெய் அன்பை இறையருள் மெய்புலவர் மணிவாசகனார்,

"மெய்தான அரும்பி விதிர்விதிர்த்
துன் விரையார்கழற் கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பி உள்ளம்"

என்று இனிதுரைத்து,

"வருந்துவன் நின மலர்ப்பாதம்
அவை காண்பான் நாயடியேன்
இருந்து நல மலர்புனை யேன்
ஏத்தேன் நாத்தழும் பேற"

என்று மொழியால மெய்யாற் பணிசெய்யாமை கூறி உள்ளத்து நினைத்தலைக் குறிப்பாலுணர்த்தி இம் மூவித வழிபாட்டின்மை காரணமாக அருள் அமுதம் பெற இயலாதென்கின்றார்.

"ஆமாறுன் திருவடிக்கே
அகங் குழையேன் அன்புருகேன்
பூமாலை புனைந் தேத்தேன்
புகழ்ந்துரையேன் புத்தேளிர்
கோமான நின் திருக்கோயில்
தூகேன் மெழுகேன் கூத்தாடேன்
சாமாறே விரைகின்றேன்
சதுராலே சார்வானே"

என்று மனம் மொழி மெய் வழிபாட்டில் நிற்கவேண்டியது நெறியாயிருந்தும் அவ்வாறின்றி 'ஊனுடலுக் கிரைதேடி உழன்றலைகிற்றடுமாறி மாநரகிற் புகுதுமகத்தாமாய வலைப்படுவார்கள்' தங்கள் அயாமையை நினைந்து உருகுகின்றார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தருமபுர ஆதீனத் திருத்தொண்டு

நான், நான் என்று சொல்லிக்கொள்ளும் உயிரையும் அவ்வுயிர்க்கு இடமான உடம்பு உலகு முதலியவற்றையும் எவர் பொய் என்பார்? இவற்றுள் உயிர்களைப் பசு என்றும், உடம்பு முதலியவற்றைப் பாசமென்றும் சாத்திரங்கள் குறிக்கும். உயிர்க்கு உடம்பிலும், உலகிலும் (மண், பெண், பொன் மூன்றிலும்) விருப்பும் வெறுப்பும் நிகழ்கின்றன. இவ்வாறு நிகழ அவ்வுயிர்களைப்பற்றியுள்ளது பாசமே. உயிர்களுக்கு இன்பமும் துன்பமும் உண்டாதற்குப் பாசங் காரணமாகிறது. அப்பாசம் தானாகவும் தீராது; உயிர்களாலும் தீராது. அதைத் தீர்க்கவே தான் உடம்பு முதலியவை உயிர்கட்குக் கிடைத்தன. அவை தாமாகவும்வரமாட்டா. உயிர்கள் தாமாகப் பெறவுமாட்டா. பசு பாசங்களின வேறாய் இருந்து அவ்வுயிர்க்கு வெவ்வேறு வகையான உடம்பு முதலியவற்றைக் கொடுத்து வரும் ஒன்றைக் கடவுள் (பதி) எனகிறது சைவம்!

இச்சைவசமயம் கடவுளால் வந்ததேயன்றி மக்கள் படைத்துக்கொண்டதன்று. சைவ சமயம் அநாதியானது. எப்பொழுதும் மக்கள் அறிவுடையவர்களாயில்லை. இடை இடையிடையே அறியாமையை அடைகின்றதை அநுபவத்திற் காண்கின்றோம். அதை உண்டாக்குவது அவ்வறிவை ஒட்டியதே. அதைத்தான் ஆணவம் என்பர். அந்த ஆணவம் தீர உடம்பும் உலகும் உண்டாயின. அவ்வுடம்பிற்கும் உலகிற்கும் காரணமானது ஒன்று இருக்கின்றது. அதை மாயை என்பர். மண்போன்றது மாயை. மண்ணிலிருந்து வரும் குடம் போன்றவை உடம்பும் உலகமும். உலகில் உடம்பால் உயிர்கள் ஏதேனும் ஒரு காரியத்தைச் செய்கின்றன. அச்செயலைக் கர்மம் என்பர். அக்கர்மங்களுக்குக் காரணமாயிருப்பது மூலகர்மம். ஆணவம், மாயை, மூலகர்மம் என்ற இம்மூன்றும் பாசம் எனப்பட்டன.

உயிர்கள் தடையற்றுக் கடவுளை அடைவதே உய்வதாகும். அவ்வுய்திபெறும் வழியை உணர்த்துவன மெய்கண்ட நூல்கள். அவற்றை அருளிய ஆசிரியர் ஸ்ரீ மெய்கண்டதேவ நாயனார் முதலியோர். அவர்க்கு அவ்வுண்மைப் பொருள் சிகண்ட முதல்வரிடத்திலிருந்து நந்திதேவர் வழியாக வந்தது. சிகண்டர் திருக்கயிலாயத்தவர். அதனால் இச்சைவ பரம்பரையைத் திருக்கயிலாய பரம்பரை என்று உரைப்பர். மெய்கண்டார் முதலாக வந்த உபதேச பரம்பரையை மெய்கண்ட சந்தானம் என்பர். இச்சந்தானத்து வந்த ஆதீனங்களுள் தருமபுர ஆதீனமும் ஒன்று.

## தருமபுர ஆதீனம்

மதுரைத் திருவாலவாய்ச் சொக்கலிங்க மூர்த்தியின் திருவருட் டுணையால், ஆதிபரமாசாரியர் ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள் திருவருட் பிரசாதமாகத் திகழ்வது இவ்வாதீனம். இம்முதற் குரவர் முதலாகத் தொடங்கி வருவதே இவ்வாதீனத்தின் உபதேச பரம்பரை. இது கி. பி. 16-வது நூற்றாண்டில் தோன்றிற்று. அப்பொழுது இங்கு வசித்துவந்த அகஸ்தியர் முதலிய முனிபுங்கவர்கள் தமது ஆசிரம பரிபாலனத்தையும், ஆலய நிர்வாகத்தையும் ஒப்புவித்துச் சென்றார்கள்.

## ஆதீனத்தின் குறிக்கோள்

அன்புமிக உண்டாய் அதிலே
விவேகம் உண்டாய்த்
துன்பவினையைத் துடைப்ப
துண்டாய்—இன்பம்
தரும்பூரணத்துக்கே தாகம்
உண்டாய் ஓடி
வரும் காரணர்க்கு
உண்மை வை.
— சிவபோகசாரம்

ஆதீனங்கள், பேரின்பந் தரும பரிபூரண நிலையை அடைய வேண்டும் என்ற பெருவேட்கையுடையராய் ஆசாரியர் இருக்குமிடந் தேடி ஓடிவந்து அடையும் பக்குவர்களுக்கே உபதேசஞ் செய்து வந்தன; அக்காலத்திற்கு அது தக்கதாயிருந்தது.

இக்காலத்தில் மக்களுக்கு ஆஸ்திகம் குறைந்து நாஸ்திகம் மிகுந்து வருவதைக் கருதி இவ்வாதீனம் தனது பண்டைய குறிக்கோள்களிலிருந்து சிறிது இறங்கி வந்து, பழைய நிலைக்கு மாறுபடாத வழியில் நின்று மக்களுக்குத் தக்க வழிகளிலெல்லாம் கடவுள் நம்பிக்கையை உண்டாக்கி ஆஸ்திகர்களாக அவ்வப்பொழுது அளவிலாத பணிகள் செய்து வருகின்றது. கால நிலையையும் மக்கள் போக்கையும் ஆராய்ந்தறிந்தே இந்நிலைக்கு இறங்கி ஆதீனம் பலபணிகளைச் செய்ய வேண்டியிருக்கிறது.

# ஆட்சேபனை மனுக்கள்

பாராளுமன்றத் தேர்தல் ஆட்சேபனை மனுக்களின் விசாரணை கார்த்திகை மாசம் வரையும் பின்போடப்படுமாம்.

# மனிதக் கை மூளை

ஹைதராபாத்திலுள்ள குரயால் குடா என்னுங்கிராமத்தில் மண்ணிலிருந்து மனிதக் கையொன்று முளைப்பதாயறியவருகின்றது.

# வாக்காளர் அடையாளம்

அரசாங்க, உள்நாட்டு அரசாங்கத் தேர்தல்களிலே வாக்காளர் அடையாளங்கள் தாங்குதல் வேண்டுமென்று குறித்த மந்திரிகளைக் கேட்டுக்கொள்வதாக யாழ்ப்பாண நகரசபையிலே திரு. K. துரைசிங்கம் ஒரு பிரேரணை கொண்டு வருவாரென அறியவருகிறது.

# யாழ் நாட்டுக்குத் தமிழ் நூல் நிலையம்

யாழ்ப்பாண நகர மண்டப மைதானத்தில் நடைபெற்ற யாழ்விளைதக் களியாட்ட விழாவின் திறப்பு விழாவிலே வடமாகாண அதிபதி திரு. P. J. ஹட்சன் பேசும்போது யாழ்ப்பாணத்தில் எண்ணிலாத தமிழ் நூல்கள் அடங்கிய நூல்நிலையம் ஒன்று அவசியம் வேண்டுமென்க் கூறினர்.

இந்தக் களியாட்ட விழாவை நகரத் தலைவர் திரு. சாம். ஏ. சபாபதி திறந்து வைத்தார்.

# 10-ம் வாய்க்கால் விநாயகர் ஆலயம்

கிளிநொச்சி 10-ம் வாய்க்காலிலுள்ள மடாலயத்தில் வெள்ளிக்கிழமை (24-8-52) ஆச்சுவேலி பிரம்மஸ்ரீ இராமநாதக் குருக்கள் அவர்களால் விநாயகர் திருவுருவம் முறைப்படி கிரியைகள் செய்து அமைக்கப்பெற்றது. விசேஷ அபிடேக பூசைகளும் அன்னதானமும் பின் தொடர்ந்தன. இவற்றுக்குப் பின் ஸ்ரீ க. வடிவேல்சாமி அவர்களால் கூட்டுப் பிரார்த்தனையும் பிரம்மஸ்ரீ இராமநாதக் குருக்கள் அவர்களால் ஆலய வழிபாடு என்னும் விஷயத்திலும் ஸ்ரீ வடிவேல்சாமி அவர்களால் "தெய்விக வாழ்வு" என்னும் விஷயத்திலும் சொற்பொழிவுகள் ஆற்றப்பெற்றன. கிளிநொச்சி சைவசமய அபிவிருத்திக்கழகக் காரியதரிசி திரு த. நல்லதம்பியும் சைவத்தொண்டுக்கு முன்வருமாறு இளைஞருக்கு ஓர் வேண்டுகோள் விடுத்தார்.

# வாழ்க்கை வானில்

வளர்மதி

## எட்டாத பழம் எட்டியே!

எப்படி நான் ஒரு புத்தசன்னியாசியாக இருக்க முடியாதோ அப்படியே நான் ஒரு தக்க பிரதம மந்திரியாகக் கடமையாற்ற வியலாதென்று மந்திரி சேர் ஜோன் கொத்தலாவல இங்கிலாந்திலிருந்து இலங்கை மாணவர்களின் சரமாரியான கேள்விகளுக்குச் சாமரான பதில் அளித்திருக்கின்றார். எற்றிற் பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயகவுக்கெல்லோரும் உரிய உதவிபுரிந்தால் இலங்கைநாடு சிறந்து வளரும் என்றும் குறிப்பிட்டார்.

தண்ணெனக் குளிரும் இங்கிலாந்து நாட்டிற் பேச்சுக்களும் உள்ளங் குளிரச் செய்யும். இலங்கைக்குத் திரும்பி வந்த பின் போக்குவரத்து மந்திரியார் தமது நீலக்கண்களைப் பொதுசனங்களுக்கு இவ்விதமாகத் தெளிவாகக் கூறவாரென்று காத்திருக்கின்றார்.

## அசம்பாவிதம்!

நகரம் தீக்கொள நாம்பு யாழ்மீட்டார் ஒருவர் என்று மேலைத் தேசப் பழமொழியுண்டு. அரிசி விலை ஏறப்போகிறது. அரிசி புறநாடுகளிலிருந்து பெறக்கொள்ளுவதரிது என்றெல்லாம் அரசாங்கமே அடிக்கடி அறிவிக்கின்றது. பயிர்ச்செய்கைக்காகப் பணம்ஒதுக்கிக் காடுவெட்டிக் கழனியாக்கத் தீவிர பிரயத்தனம்எடுக்கவேண்டியகாலத்தில் வீடில்லாதவர்களுக்கு வீடும், உத்தியோகத்தர்களுக்கு மாடமாளிகைகளும், உலகச் சுற்றுப்பிரயாணத்துக்கு குபேர வசதிகளும் செய்து கொண்டிருக்கும் ஒரு அரசாங்கத்தை என்னென் றெடுத்துரைப்பது!

திரு. வதந்தி.

# சிவஞான போதச் செம்பொருள்

(2ம் பக்கத் தொடர்ச்சி)

ரங்களை எல்லா உயிர்கட்குஞ் செய்துவரும் பாசம் நீங்காத உயிர்க்கும் அது நீங்கிய உயிர்க்குஞ் செய்து வரும். பாசம் நீங்காத உயிர்க்கு அப்பாசப் பொருள்களை அறிவித்தும், அறிந்தும் உபகரிக்கும். பாசம் நீங்கிய உயிர்க்கோ, அப்பாசப் பொருள்கள் விடயமாகா; அவைகளை இவ்வுயிர்களும் அறியா. இவ்வுயிர்களின் பொருட்டுச் சிவமும் அறியாது, இவ்வுயிர்கள் தம்மையும் அறியாவென்றோம். என்றால் இவைகளின் பொருட்டுச் சிவமும் இவற்றினை அறியாதென்பது பெறப்படும். இனி இவ்வுயிர்களாலறிய நிற்பதுதான் எது? சிவம் ஒன்றே. இச்சிவம் உயிர்க்குத் தன்னை அறிவிப்பதோடு தானுந் தன்னை அறியுமென்றால்; தன்னைப் பற்றுதலாகிய குற்றம் வருமன்றோ எனின், அன்று தன்னையே தானறிதல் எக்காலத்துங் குற்றமன்று. அசாத்தியமான விடத்தே, குற்றமாய் முடியும். இதுவன்றி எதனாலும் எக்காலத்துந் தன்னை அறிய முடியாதென்பதன்று. நம்முடைய கண்ணின் விம்பத்தைக் கண்ணாடியினுதவியின்றி நாமாற் சிறிதுங் காணமுடியாது. எனினும் அக்கண்ணாடியினுதவி கிடைத்தபோது, நம்முடைய படிமத்தையே நம்முடைய கண் காணுகின்றது அப்படிக் காணுவது நம்முடைய உடம்பிலுள்ள கண் படிமமே. வேறோர் படிமமன்று. வெறுந் தோற்றமுமன்று. கண்ணாடியிலலாதபோது நம்முடைய கண் படிமம் நம்முடைய கண்ணிந்திரியத்திற்கு எதிர்ப்படுவதில்லையாதலால், அப்படிமத்தின ஒளி நம்முடைய கண்ணிந்திரியத்திற கூடுமாறில்லை. அவ்வொளி நம்முடைய கண்ணிந்திரியத்திற் கூடும்பொருட்டே கண்ணாடியினுதவி வேண்டப்படுகறது. இவ்வுதவி கிடைத்ததும் நம்முடைய கண் படிமத்தின ஒளியானது, அக்கண்ணாடியிற் பட்டுத் திரும்பி நமது கண்ணிந்திரியத்தில் வந்து கூடுகின்றது எனவே, ஒரு கண் தன்னையும் காணுதல் கூடுமென்பதாயிற்று. அப்படியே சிவமும் தன்னையறிதல்கூடும். அப்படியறிவதிற தன்னை அறியுங் குற்றமில்லை. ஆகவே, உயிர் பாசப்பொருள்களை அறிதற்கண் சிவம் அறிவித்தல் அறிதலாய இருவித உபகாரங்களைச் செய்தல்போல அச்சிவம் தன்னை அறிதற்கண்ணும் உயிர்க்கு அவ்விருவித உபகாரங்களைச் செய்யும். இவ்விருவித உபகாரங்களையும் சிவம் எல்லா உயிர்கட்கும் செய்து வருதலைப் பாச நீக்கம் பெற்றுச் சிவத்தினருள் விளங்கிய உயிர்கள் யாவும் உணருமென்றோம். ஆனால் இவ்வுபகாரங்களை ஒரே ஒருபொழுது அறிந்தால்மட்டும் போதாது. இவற்றை மறக்கும் உயிர்கட்கு இவற்றின் காரணமாகிய அருள் விளக்கமும் இன்றாய் முடியும். ஆதலால் இவ்வுபகாரங்களைப் பாசம் நீங்கிய உயிர்கள் அறிந்து மறவாதிருத்தல வேண்டும். இதுவன்றி இவ்வுபகாரங்களை அறிந்த உயிர்கள் அவ்வறிதலின் பலனாக அவற்றினைச் செய்த சிவத்தின்பால் இச்சை மீதூர்தலும வேண்டும். யாராயினும் ஒருவனால் நமக்குச் செய்யப்படும் உபகாரத்தை நாம் உண்மையிலறிவோமானல், நமக்கு அவன்பால் இச்சை உண்டாவது நிச்சயம். அப்படியே சிவத்தின் இருவித உபகாரங்களையும் உண்மையிலறியும் உயிர்கட்கு, அச்சிவத்தின்மீது இச்சை மென்மேலும் பெருகுவதும் வேண்டும்.

பாசம் நீங்கிய உயிர், இவ்வாறு சிவத்தினிருவித உபகாரங்களை அறிந்து, மறவாது அதன்பாலிச்சை பெருகி, மீதூர நிற்கும் நிலையே 'சிவநிட்டை' எனப்படும். இந்நிட்டையில் நிற்பார்க்கு உடம்பிருப்பதால், இவர் 'சீவன் முத்தர்' எனப்படுவர். பாசம் நீங்கிய உயிர்கள் இந்நிலையில் நிற்கவேண்டுமென்னுங் கருத்தையே 'இச் சூத்திரம், 'அயரா அன்பின் செல்லும்' என உணர்த்தும். ஈண்டு 'அயராமை'யாவது மறவாதிருத்தல் அன்பிற் செல்லுதலாவது, இச்சை மீதூர்தல், அதாவது பக்தி செய்தல். நிட்டை நில் என்னும் பகுதி அடியாகப் பிறந்த சொல மனதை ஓரிடத்தில் நிறுத்துதல் நிட்டை.

"சிவ நிட்டையில்
உறைத்து நிற்பவரே
சிவத்தின் திருவடி அடைவர்."

பாசம் நீங்கிய உயிர்கள் சிவத்தின் இருவித உபகாரங்களை அறிந்து, மறவாது, அதன்பால் இச்சைமீதூர நிற்றலே சிவநிட்டை என்றோம். இனி இச் சிவநிட்டையின் பலன்தான் யாது என்பதை ஆராய்வாம், எல்லா உயிர்கள்பாலும் அன்னியமின்றிக் கலந்து நிற்கும் சிவம் இந் நிட்டையில உறைத்து நிற்கும் உயிர்கள் அவ்வாறு கலந்து நிற்கும். ஆனல் மற்ற உயிர்களுக்கு அச் சிவத்தின்பால் இச்சை இன்மையாதலால் அவ்வுயிர்கள் சிவத்தை அனுபவித்தலில்லை. ஒருவன நாவிற் சர்க்கரையிருப்பினும் அவனுக்கு அந்நாவிலுள்ள நோய் முதலிய காரணத்தால் அதன்பால் இச்சையின்றேல், அவன் அதன் இரசத்தை அநுபவியான். அதுபோல, சிவம் ஓர் உயிர்பாற் கலந்திருப்பினும் அவ்வுயிர்க்கு அச்சிவத்தின்பால் இச்சை மீதூராதவரை சிவானுபவம் எய்தாது. சிவானுபவத்திற்குச் சிவத்தின்பாலுள்ள இச்சையின் பெருக்கமே காரணமாம். இவ்விச்சைப் பெருக்கத்தில் அழுந்தி நிற்பவரே சிவானுபவத்தைப்பெறுவர். இச் சிவானுபவமே சிவ விளக்கமாம், இதுவன்றிச் சிவத்தை வசன மாத்திரையால் அறிதல் சிவ விளக்கமன்று. இங்ஙவே சிவப்பேறு என்று சொல்லப்படும் சிவம் யாண்டும வியாபித்து நிற்கும் பொருளாதலால் அதனைத் தன் அநுபவத்தில் விளக்கப் பெறுதலே அதனைப் பெறுதலாம், இச் சிவ விளக்கமே சிவத்தின் திருவடி அடைதலுமாகும், ஈண்டு திருவடி என்றது சிவத்தாலெய்தும் பரமசுகம், இச்சிவப்பேறுடையார் அதனால் வரும் சுகப்பேறுமுடையார். ஆதலால், இப்பேறு திருவடிப்பேறு எனப்படும். இப்பேறு உடம்புள்ளபோதே அடையப் பெறுதலால், சீவன் முத்தி என்று சொல்லப்படும், இக் கருத்துக்களையே, இச்சூத்திரம் 'அரன் கழல செலுமே' என்றுணர்த்தும், ஈண்டு உணர்த்தப்படும 'அரன் கழல் செலுமே' என்பதற்கும், எட்டாஞ்சூத்திரத்து உணர்த்திய 'அரன் கழல் செலுமே' என்பதற்கும் பேதமுண்டு. அச் சூத்திரத்து 'அரன் கழல் செலுமே' என்பதற்கு, அன்னியமின்மையின் என்பது ஏதுவாய் நின்றது. அதாவது சிவம் குருவுமாய் உணர்த்தக் கருவிகளை விட்டு நீங்கிய உயிரால் காட்கிற்பது. அதனோடு அன்னியமின்றி நிற்கும் 'அரன கழல்' என்பது கருத்து. இச் சூத்திரத்து 'அரன் கழல் செலுமே' என்பதற்கு ஏதுவாய் நிற்பது 'அயரா அன்பின்' என்பது. அதாவது சிவத்தின் உபகாரங்களை அறிந்து மறவாது அதன்மீது காதல் பெருக நிற்கும் உயிர் அச் சிவத்தினை அடைந்து அனுபவிக்குமென்பது கருத்து. அதாவது எட்டாஞ் சூத்திரத்துக் கூறப்படும் 'அரன் கழல்' சிவ உருவத்தினையும், ஈண்டுக் கூறப்படும 'அரன் கழல்' சிவபோகத்தையும் உணர்த்தும்.

— சிவ தொண்டன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றுமுள்ள - - - - முப்பொருள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மனம் ஒரு குரங்குபோல் எதாவது ஒரு கிளையைப் பிடித்துக் கொண்டே யிருக்கும். இதைப் பற்றுக்கோடு என்று சொல்லுவார்கள். உலகமானது மனத்துக்கு ஒரு பற்றுக்கோடு. உலகத்தை விட்டால் மனத்துக்கு வேறு ஒரு பற்றுக்கோடு தேவை அல்லவா? அதுதான் கடவுள் என்ற பற்றுக்கோடு, ஆகையால் உலகத்திற்குப் பதிலாகக் கடவுளை வைத்து உயிரானது தனது வேலைகளையெல்லாம் செய்வதுதான் பாசத்தை ஒழிப்பதற்கு உபாயமாகும். இந்த உபாயம் நான்கு மார்க்கங்கள் அல்லது நான்கு படிகளாகப் பிரிக்கப்பட் டிருக்கின்றது. அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பனவாகும்.

## சரியை மார்க்கம்

சரியைத் தொண்டு என்பது கடவுளை எஜமானனாக ஓர் உருவத்தில் கொண்டு எஜமானனுக்கு ஒரு வேலைக்காரன் எந்தெந்த உபசாரங்கள் செய்வானோ அவைகளையெல்லாம் அவ்வுருவத்திற்குச் செய்தல். அலகிடுதல், மெழுகுதல், பூக்கொய்தல், பூத்தொடுத்தல், இன்னும் இவை போன்ற மற்ற காரியங்களெல்லாம் செய்தல். தனக்கென ஒன்றும் செய்யாமல் கடவுளுக்கென்றே செயல் நிகழ்வதால், ஆணவ மலம் கொஞ்சம் கொஞ்சமாகத் தேய்ந்து வரும் இத் தொண்டைத் தாச மார்க்கம் என்றும் சொல்லுவர். இந்த முறையில் நின்று வழிபாடு செய்தவர் திருநாவுக்கரசு சுவாமிகளாவர்.

## கிரியா மார்க்கம்

கிரியைத் தொண்டாவது உருவத்திலே கடவுளை எழுந்தருளச் செய்து அபிஷேகம் போன்ற பதினாறு வகையான உபசாரங்களைச் செய்து தீயை வளர்த்து அதையும் கடவுள் உருவாக எண்ணி, உயிர்வதையில்லாத வேள்வியைச் செய்தல். இங்கே "நான்" என்ற அகப்பற்றும் "எனது" என்ற புறப்பற்றும் மிகுதியாக நீங்கும். இந்த மார்க்கம் தகப்பன் பிள்ளை என்ற முறையிலிருந்து கடவுளை வழிபடும் முறையாகும். இதற்குச் சற்புத்திரமார்க்கம் என்றும் சொல்லுவர். இம்முறையில் பாராலும் சுட்டிக் காட்ட முடியாத கடவுளை "தோடுடைய செவியன்" என்று சுட்டிக் காட்டினவர்தான் சம்பந்த சுவாமிகள்.

## யோகமும் ஞானமும்

யோகத்தின் மூலமாக உடம்பினுள்ளிருக்கும் ஒளிவடிவான கடவுளைக் கண்டு வழிபட்டு இன்பம் அடைதல், "உடம்பினுள்ளே உறுபொருள் கண்டேன், உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே" என்று திருமூலர் கூறியவாறு கடவுளை நமக்குள்ளே காணும் முறையாகும். இதைக் கடவுளும் தானும் சிநேகிதர்கள் போல அளவளாவும் தன்மைக்கு ஒப்பிடுவர். இந்த வழியினைச் சகமார்க்கம் என்றும் சொல்லுவர். இம் முறையில் கடவுளைக் கண்டவர் சுந்தரமூர்த்தி சுவாமிகள். இவை யாவினும் சிறந்தது ஞான மார்க்கமாகும். இதில் ஞான சாத்திரங்களைக் கற்று அதன்படி வாழ்க்கையில் நடந்து ஒழுகுவதாகும். இது தலைவன் தலைவி என்றமுறையில் இறைவனை வழிபடுவதாகும். இதனைச் சன்மார்க்கம் என்றும் வழங்குவர் மணிவாசகப் பெருந்தகையார் இம் முறையில் இறைவனை வழிபட்டவராவர்.

எனவே சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு நிலைகளும் ஒன்றன்பின் ஒன்றாகத்தான் நிகழ்தல் வேண்டும்.

"விரும்புஞ் சரியை முதல் மெய்ஞ்
ஞானம் நான்கும்,
அரும்பு, மலர் காய், கனிபோல்
அன்றோ பராபரமே"

என்ற தாயுமான சுவாமிகளது மிகப் பொருத்தமான உவமைக்கிணங்கச் சரியை என்ற அரும்பு கிரியையாய் மலர்ந்து, யோகமாய்க் காய்த்து, தக்க பருவம் வந்த காலத்தேதான் அது பழுத்து மெய்ஞ்ஞானம் அல்லது இறை ஞானம் என்றதொரு இனியகனியாகப் பயன்தருவதாகும்.

மேற்கூறிய மார்க்கங்களிலெல்லாம் நின்று இறைவனை நேரே கண்டு அனுபவித்த பெரியார்கள் தான் நமது தெய்வச் சேக்கிழார் நமக்கு அருளிய பெரியபுராணத்திலுள்ள சிவனடியார்களாவர்.

பெரிய புராணத்துள்ள ஒவ்வொரு நாயன்மாரும், தனக்கென வாழாது பிறர்க்காகவே வாழ்ந்து, தாம் கொண்ட குறிக்கோளுக்கு இடர்வந்த காலத்தில் பல தியாகங்கள்செய்து, 'வழுக்கி வீழினும் நின் திருப்பெயர் அல்லால் மற்று நான் அறியேன் மறு மாற்றம்" என்ற எண்ணத்தோடு வாழ்ந்த பெரியார்கள். யார் பெரியார்? என்ற கேள்விக்கு நம தெய்வப் புலவர் திருவள்ளுவர், "செயற்கரிய செய்வர் பெரியர்" என்று சொல்லுகின்றார். அத்தகைய செயற்கரிய செய்கைகளை அவர்கள் செய்ததனால்தான் ... இறைவனை நேரே கண்டனர். இன்றும் எல்லாராலும் போற்றக்கூடிய ஒரு நிலையில் அன்று அவர்கள் வாழ்ந்து காட்டினார்கள். உலகம் உள்ள அளவும் அவர்கள் போற்றப்படுவார்கள். — சித்தாந்தம்

**மனத்தொடு வாய்மை மொழியிற் றவத்தொடு தானஞ் செய்வாரிற் றலை.**


திறமான **தேக்க மரங்கள்** பல தினிசுகளிலும்

திறமான **ருணிமார்க்ஓடுகள்** 13½, 14 இஞ்சிகளிலும்

வந்திருக்கின்றன

தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்

சேகரம் & சன்ஸ்

ஆஸ்பத்திரிரோட், யாழ்ப்பாணம்.

Std. 2



**சைவப்பரிபாலன வித்தியாலயம்**

அறுபதாம் ஆண்டுப் பூர்த்தி ஞாபகார்த்தம்

கைத் தொழிற் கட்டிடம் அமைப்பதற்கு, பணஞ் சேகரிக்கும்பொருட்டு

**● கதம்பக் கச்சேரி ●**

7-9-52 ஞாயிற்றுக்கிழமை

இரவு 7 மணிக்கு ஆரம்பம்.

பிரவேசக் கட்டணம் :

ரூபா. 10, 5, 3, 2, 1.

வித்தியாலய அன்பர்கள் ஆதரிப்பார்களாக.

காரைநகர் 28-9-52, — இ. நாகலிங்கம் மனேஜர்.

M. 107 29, 2—9—52.


**கோட்டு விற்பனவு விளம்பரம்**

யாழ்ப்பாணம் டிஸ்றிக்கோடு.

1. காரைதீவு மேற்கு இப்போ குவாந்தன் கந்தப்பர் வேலுப்பிள்ளையும்
2. காரைதீவு மேற்கு பெண் இராசம்மாவும் இவர்களின் அற்றோனி, கொழும்பு இராமலிங்கம் தில்லைநாதர். —வழக்காளிகள்.

VS

இல. 7630.

1. காரைதீவு கிழக்கு அ. முருகேசு அம்பலவாணர்
2. காரைதீவு கிழக்கு முருகேசு கைம்பெண் மீனாட்சிப்பிள்ளை
3. காரைதீவுகிழக்கு நல்லதம்பி அம்பலவாணர் —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோடு 7630ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஆண்டுக் காணிகளை 1952-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 27ந் திகதி சனிக்கிழமை பிற்பகல் நாலு மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: ரூபா 15538-0 இதில் ரூபா 14000-00 க்கு 12-3-51 தொடக்கம 23-7-51 வரைக்கும் வருடமொன்றுக்கு நூற்றுக்கு 4 வீதமான வட்டியும் அதன் பின் முழுத்தொகைக்கும் 23-7-51 தொடக்கம் இறுக்கும் வரைக்கும் வருட மொன்றுக்கு நூற்றுக்கு 5 வீதமான வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 407-41 இதில் ரூபா 200-00 கொடுபட்டது.

ஆதன விபரம்

1. காரைதீவுக் கோயிற்பற்று வலந்தலை இறை கோமன்பயப்புலம் நெற் பரப்பு 45½ யும் செய்பயிர்களும் கிணறும் எல்லை கிழக்கு விஞசித்தம்பி நல்லதம்பியும் முருகேசு அம்பலவாணரும் கந்தையா மகள் பரமேஸ்வரியும் பங்காளரும் வடக்கு பாறு குமாரவேலுவும் பங்காளரும கந்தையா மகள் பரமேஸ்வரியும் பங்காளரும் அருணாசலம் மகள் இலட்சுமியும மேற்கு அம்பலவாணர் காசிநாதரும் சுப்பிரமணியம் கந்தப்புவும காசிநாதர் சுப்பிரமணியமும் வேலுப்பிள்ளை பெண் சின்னம்மாவும் கனகசபை பெண் தங்கம்மாவும் தெற்கு சண்முகம் இராமநாதன் இதடைகளும்.

2. காரைதீவுக் கோயிற்பற்று வலந்தலையும் களபூமியுமிறை குஞ்சி வன்னியன் வளவும் குஞ்சிவளவும நிலப்பரப்பு 8¾யும் பனைகள் வடலிகள் செய்பயிர் வான்பயிர்கள் வீடும் கிணறும் எல்லை கிழக்கு ஒழுங்கை வடக்கு சின்னத்தம்பி பொன்னம்பலம் மேற்கு சின்னையா துரைசிங்கமும் பங்காளரும தொகு கந்தன் சின்னபபனும் கணபதி கைம்பெண் சின்னக்குட்டியும் போல் பெனசமிலும் இதடைகளும்.

ஆ. ச. கந்தையா
A. S. Kandiah
கொம்பிஷனர்.

காரைநகர்
20-8-52.

M. 110 2—9—52.


L.K.S. LEBBAY BROS
GOLD HOUSE

நல்ல வாட்சிகள் கிடைக்குமிடம்

எல். கே. எஸ்.
லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

இலங்கையின் மிகப்பெரிய

**நகை**

வியாபாரிகள்

=O=

தந்தி: "JEWELLERS"
போன்: 161.

கிளைத்தானம்:
63, கன்னாதிட்டி
யாழ்ப்பாணம்.



**யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி**

1918-ம் ௵ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கோடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா

134,3670

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14 20-11-46—20-11-49.



நீங்கள் இளமைப் பருவத்தையடைய

சி. எம். சாமி




உபயோகியுங்கள்

தாதுபுஷ்டியைத் தருவதில் சிறந்தது.
இதற்கு நிகரானமருந்து வேறு ஒன்றுமில்லை.

அபார தாது புஷ்டியும், பலமும், பசியும், இரதத விருத்தியும் உண்டாக்கும். இல்வாழ்க்கையில் அதியற்புதசுகந்தரும. நீரழிவு பவுத்திரம, மூலம், குன்மம, இடுப்புவலி, வாய்வு, வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு முதலிய சகல வியாதிகளையும் நீக்கும,

24 நாள் பஸ்பம் அனுபானத்துடன் விலை ரூ. 25—0—0

**குருபஸ்பம் (தொய்வுக்கு)**

தோய்வு, இருமல், ஈளை, கபம், காசம், மார்துடிப்பு தொண்டைவலி, க்ஷயம் முதலிய சகல வியாதிகளையும நீக்கும். அருமையானது.

24 நாள் புட்டி 1க்கு விலை ரூபா 20

மலையப்பசாமிவைத்தியசாலை பழனி S I

(கியாட்லாக் இனும்)

M. 16. 25-4-52—25-10-52.


Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245; Navalar Road Jaffna. for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai. Jaffna, at their Press, the Saiva Prakasa Press. Vannarponna, Jaffna on Tuesday, September 2 1952.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org